சிங்கப்பூர்

# கோழிச் சிறகால் செய்யப்பட்ட பொட்டலத்தில் கோழி இறைச்சியை வைத்து விற்கிறார்கள்?

வாசிப்புநேரம் - 1 நிமிடம்



படம்: NTU Singapore

வெளியீடு : 06 Jul 2022 07:24AM
புதுப்பிப்பு : 06 Jul 2022 07:24AM

கோழிச் சிறகுகளைக் கொண்டு தயாரிக்கப்பட்ட பொட்டலங்களில் அதன் இறைச்சி இனி விற்கப்படலாம்.

நன்யாங் தொழில்நுட்பப் பல்கலைக்கழகமும் Leong Hup பண்ணையும் இணைந்து மேற்கொண்ட கூட்டு முயற்சி அதனைச் சாத்தியப்படுத்தியுள்ளது.

கோழிகளை வெட்டும்போது அவற்றின் ரத்தம், சிறகு ,எலும்பு என தேவையற்ற பாகங்கள் கழிவுகளாக ஒருபுறம் குவியத் தொடங்கும்.

அவற்றை முறையாக அப்புறப்படுத்த ஆண்டுக்கு ஒரு மில்லியன் வெள்ளி வரை ஆகக்கூடும்.

அன்றாடம் 4 டன் கோழி சிறகு குவிகிறது.

வழக்கமாக எரிக்கப்படும் அதனைச் சுத்தப்படுத்தி மணிக்கணக்கில் அரைத்துப் பின்னர் Polyester Resin எனப்படும் ரசாயனத்துடன் சேர்த்தால் பிளாஸ்டிக் போன்றதொரு மூலப்பொருள் கிடைக்கிறது.

அதைக் கொண்டு தட்டுகள் முதலியவற்றைத் தயாரிக்க முடியும்.

உயிரணு அடிப்படையிலான கோழி இறைச்சியைக் கட்டுப்படியான விலையில் தயாரிக்கக் கோழியின் ரத்தம் பயன்படுமா என்ற ஆராய்ச்சியையும் பண்ணை மேற்கொண்டு வருகிறது.

Aa

கோழியின் மலத்தை உயிர் எரிசக்தியாய் மாற்றுவது குறித்த ஆய்வுகளும் நடைபெறுகின்றன.

திட்டமிட்டபடி அனைத்தும் நடந்தால் கழிவுகளற்ற முதல் பண்ணையாய் Leong Hup விளங்கும்.

*ஆதாரம் : CNA*

---

**மேலும் செய்திகள் கட்டுரைகள்**

சிங்கப்பூரில் புதிதாய் 12,784 பேருக்குக் COVID-19 விரைவுச்சாலையில் Grab காரை ஓட்டிய ஆண் ஓ